द्भेदो नास्तीत्यर्थः । तथाच शिवशक्त्योर्भेदावभास एव मिथ्या न तु प्रपञ्चवत्स्वरूपमपीत्यर्थः ॥ ३ ॥

इत्थं सामान्यरूपिणीं परां शक्तिं निरूप्य सैव शक्यविशेष-प्रतियोगिनिरूपिता सती तत्तद्विशेषशक्त्यात्मिका भवतीत्याह— जगदित्यादिना । जगत्कारणमिति भावपरो निर्देशः । यः शिवो जगत्कारणत्वमापन्नो जगदङ्कुररूपशक्त्यवस्थाया ऊर्ध्वं जगदाकार-विवर्तिष्यमाणमायाधिष्ठानत्वात्तस्यापि शिवस्य सा पूर्वोक्ता परा शक्तिरेव जगन्निर्माणशक्तिरूपा भवेत् । तया शक्त्या रहितः शिवो निःशक्तित्वाज्जगन्निर्माणासमर्थ इत्यर्थः ॥ ४ ॥

இதன் பொருள்:—போக்த்ரு போக்கிய ரூபமாயும், நியந்தாவோடுகூடியதாயுமுள்ள பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கு முன், பிரளயாவஸ்தையில், விகல்பத்திற்குக் காரணமின்மையின், பரசிவஸ்வரூபம் நிர்விகல்பகமாயும், ஸ்வப்பிரதிஷ்டிதமாயும் இருந்தது. அதனிடத்தில் அத்தியஸ்தமாய்த் தோன்றிய மாயையும் விகல்பமில்லாமலே இருந்தது. அம்மாயையும், பிராணிகளின் கர்ம பரிபாகவசத்தினால், கொஞ்சம் மாறுதலடையும் பொழுது, சிவன் வேறு சக்தி வேறு என்னும் பாகுபாடின்மையின், அது, சிவசக்திகளுக்குப் பொதுத்தன்மையான சின்மாத்திரத்தை யாஸ்ரயித்து விளங்குகின்றது.

சின்மாத்திர வடிவினனாகும் பரசிவமும், மாயையின் ஸம்பந்தத்தினால், தன் நிலையைவிட்டுச் சிறிது நீங்கி மாயைக்கு அபிமுகமாகின்றது.

சங்கை:—அஸங்க உதாஸீனமாயும் பரமாநந்தஸ்வரூபமாயும், விகாரரஹிதமாயுமுள்ள பரசிவத்திற்கு மாயா ஸம்பந்தமும், அதனுல் ஜகத்காரணத்துவமும் எங்ஙனம் பொருந்தும்? பிராணிகளின் கர்மபரிபாக வசத்தினுலெனின், ஸ்வதந்த்ரமான பரசிவத்திற்கும், பரதந்த்ரமான கர்ம பரிபாகத்திற்கும் யோகம் பொருந்தாது.

தனது போகத்தின் பொருட்டெனின், அதுவும் பொருத்தமானதன்று. பரசிவம் ஆப்தகாமனுதலின். லீலையின் பொருட்டெனின் அதுவும் யுக்தமன்று. ஏனெனின் நானுவிதமாய் விளங்கும் இப்பிரபஞ்சத்தினுல் நியதமான ஸுகமுண்டாகாமையின், லீலையின் பொருட்டென்பதும் ஒவ்வாது.

ஸமாதானம்:— லீலையாகச் சிருஷ்டித்தாரென்பது பொருந்தும். பிராணிகளின் கர்மாக்களின் பரிபக்குவ தார்தம்மியங் காரணமாக அவரவர்களுக்கு ஸுக துக்க நியமமில்லையே தவிர, பரசிவத்திற்கு லீலையாகவேயிருக்கின்றது. பரமேஸ்வரன், இந்த ஜகத்தை லீலையாகச் சிருஷ்டி செய்ய ஸங்கல்பிக்கும் போது, பிராணிகளின் நானுவித கர்ம பரிபாகத்தையும், புண்ணிய பாபங்கள் காரணமாக அவரவர்கள் அநுபவிக்கவேண்டிய ஸுகதுக்கங்களையும் நியமித்து, மாயா ஸம்பந்தனுகிச் சிருஷ்டிக்கின்ருர்.

இதனுல், பரசிவத்திற்குக் கர்ம பரதந்த்ரம் ஏற்படுவதில்லை. தனது நித்திய ஸங்கல்ப வலிமையால். ஒரு சக்கிரவர்த்தி லீலையாய் ஒரு காரியத்தைச் செய்யுங்கால், எங்ஙனம், அவனுக்கு ஸ்வாதந்த்ரிய பங்கமில்லையோ, அங்ஙனமே, பரசிவத்திற்கும் ஸ்வதந்த்ரத் தன்மைக்குப் பங்கமில்லை.